# 201-அஞ்சுவர் பெரியோர்

சிவசுந்தரமூர்த்தியை வருத்தம் பார்ப்பதற்காக ரவீந்திரன் ஆசிரியர் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றார். ரவீந்திரன் அமைதியானவர். அடக்கமானவர். பயனில்வாத சொற்களைப் பேசாதவர். தீயவற்றைச் செய்ய அஞ்சுபவர் இவற்றிற்கு எதிர்மாறான குணத்தையுடைய சிவசுந்தர மூர்த்தியின் வீட்டுக்குச் செல்ல அவருக்கு விருப்பமில்லை. எனினும் அவரது மகன் க.பொ.த உயர்தர வகுப்பில் அவரிடம் கற்பவன். நன்றாகப் படிக்கக் கூடிய மாணவன். ஒழுக்கம் மிக்கவன். ரவீந்திரனில் பெருமதிப்பு உடையவன். அடிக்கடி ரவீந்திரனிடம் தனது தந்தையின் தீய நடவடிக்கைகளைப் பற்றிக் கூறிக் கவலைப்படுவான்; "ஐயா எனது தந்தை மிகவும் மோசமானவர். கூடாத வழியில் செல்கிறார். ஊரிலும் சரி, அலுவலகத்திலும் சரி அவரின் நடத்தை மிகவும் மோசமாக உள்ளது. கெட்டவர்களுடனும் குடிகாரர்களுடனும் நட்பு வைத்திருக்கிறார். அடாவடித் தனங்களில் ஈடுபடுகின்றார். அதைவிட எமது அதிபருடனும் ஊரில் உள்ள நல்ல மனிதர்களுடனும் காரணமில்லாமல் சண்டைக்குப் போகிறார். இதனால் எனக்கு அவமானமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது. என்னால் நண்பர்களுடன் சகஜமாகப் பழக முடியவில்லை. அவர்கள் கூடிநின்று எனது தந்தையைப் பற்றிக் கதைத்துச் சிரிக்கிறார்கள். என்னைக் கண்டதும் விட்டு விடுகிறார்கள். அப்படி விடுவதற்கு மனிதாபிமானம் காரணமாக இருந்தால் நான் கவலைப்படமாட்டேன்.

அவர்கள் நான் அப்பாவிடம் கூறி தமக்குக் கெடுதல் செய்து விடுவேன் என்ற பயத்தினால்தான் என்னைக் கண்டதும் கதையாமல் விடுகின்றார்கள். பயப்படுகின்றார்கள். சின்னத்தம்பியின் மகன் சிவபாலனுடனும் அவனது நண்பர்களுடனும்தான் நான் நட்புப் பூண்டுள்ளதாக நினைத்து ஒழுக்கமுள்ள மாணவர்கள் என்னை விலத்தி வைக்கிறார்கள். இது எனக்குக் கவலையாக இருக்கிறது'' என்று கூறுவான். அதனாலும் நல்ல மாணவனான அவன் மனம் நோகக்கூடாதென்பதற்காகவும்தான் ரவீந்திரன் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றார்.

முற்றத்தில் நாற்காலியில் அமர்ந்திருந்த சிவசுந்தரமூர்த்தி, ரவீந்திரனைக் கண்டதும் எழுந்து அவரை வீட்டின் உள்ளே வரும்படி கூறிவிட்டு வீட்டின் உள்ளே சென்றார்.

‘‘இருங்கோ வாத்தியார். நீங்கள் எங்கட வீடுகளுக்கு வருவியள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எனக்கு வருத்தம் வந்ததாலை அதிகமாய் எல்லோரும் வந்து பார்த்தவை. உங்கடை மாமா மட்டும் வரேல்லை. வேலாயுதபிள்ளை, தணிகாசலம் போன்றவையின்ரை வீட்டுக்குப் போகத்தான் அவர் தகுதியானவர். பள்ளிக் கூடத்திலை ஏதோ பெரிசாய்ச் செய்யிறதாய் அவருக்குப் பின்னாலை திரியிற நாலுபேர் சொல்லீனை. உங்கை என்னத்தைச் செய்து போட்டார். பரீட்சைப் பெறுபேறுகள் முந்தினமாதிரித்தான் வருது. இடைக்கிடை கூடிக்குறையுது. அதைவிட கணேசமூர்த்தியை ஏமாத்தி காணி வாங்கிப் போட்டார். அவன்ரை மனிசியும் தகப்பனும் திட்டிக் கொண்டு

திரியுதுகள். இது விக்கினேஸ்வரமூர்த்திக்குத் தேவையே.........?''

ரவீந்திரன் எதுவும் பேசவில்லை.

சிவசுந்தரமூர்த்தியின் மகன் சரவணன் ரவீந்திரனைக் கண்டு மிகவும் மகிழ்ந்தான். பலவகையான சிற்றுண்டி வகைகளைக் கொடுத்தான். மதிய உணவை உண்டுவிட்டுச் செல்லும்படி வற்புறுத்தினான்.

''மகன் உங்களைப் பற்றியும் விக்கினேஸ்வரமூர்த்தியைப் பற்றியும் பெருமையாகச் சொல்லுவான். அந்தளவில் அவனுக்கு மூளைச் சலவை செய்திருக்கிறியள். இப்ப விக்கினேஸ்வரமூர்த்திக்கு நல்ல காலமாக இருக்கலாம். ஆனால் என்னைப் பகைத்துக் கொண்டு பாடசாலையை நடத்தேலாது. முந்தின அதிபரை மாத்திப் போட்டுத்தான் இவரைக் கொண்டு வந்தனான். இவரை மாத்திறது எனக்குப் பெரிய வேலை இல்லை.''

ரவீந்திரனால் அவரது வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. தீய செயல்களுக்குத் தீவினையாளர்கள் அஞ்சமாட்டார்கள். அகந்தை உள்ளவனுக்கு அறிவுரைகள் கூறிப் பயனில்லை என உணர்ந்து பேசாமல் இருந்தார் ரவீந்திரன்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த சரவணன், ரவீந்திரனை தனது அறைக்கு அழைத்துச் சென்று கூறினான; ''ஐயா, எனக்காகத்தான் எனது தந்தையை

நீங்கள் பார்க்க வந்தீர்கள். எனது தந்தையின் தீய வார்த்தைகளைத் தயவுசெய்து எனக்காகப் பொறுத்துக் கொள்ளுங்கள். என்னில் உள்ள அன்பு காரணமாக வந்த நீங்கள் என்னுடன் அமர்ந்து எனது வீட்டில் உணவருந்தல் வேண்டும்''. என்றான் சரவணன். அவனது கண்களால் கண்ணீர் வழிந்தது.

ரவீந்திரன் அவனது வேண்டுகோளை ஏற்று அவனது வீட்டில் அன்று மதிய உணவை உண்டார். சரவணின் மகிழ்விற்கு அளவே இல்லை.

201 தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்

தீவினை என்னும் செருக்கு.

தீயசெயல்களைச் செய்வதற்கு அகந்தையுடைய பாவிகள் அஞ்சமாட்டார்கள். ஆனால் நல்ல மனமுடைய பெரியவர்கள் தீயசெயல்களைச் செய்ய அஞ்சுவார்கள்.

# தீ

இரவு ஒன்பது மணிக்கான செய்தி வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. சிவசுந்தரமூர்த்தியின் வீட்டில் கருணாகரனும் சின்னத்தம்பியும் சுந்தரமும் இருந்தனர்.

என்றுமில்லாதவாறு சிவசுந்தரமூர்த்தி அவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார். நோய் வந்தபின்பு வழமையாக எட்டுமணிக்குப் பின் நண்பர்களுடன் சேர்ந்து கதைக்காத சிவசுந்தரமூர்த்தி அன்று இரவு ஒன்பது மணிக்கு மேலாகியும் கதைத்துக் கொண்டிருந்தமையால் கஜேந்தினி வந்து படுக்கும்படி பலமுறை வற்புறுத்தினாள். எனினும் சிவசுந்தரமூர்த்தி அதைக் கேட்கவில்லை.

சிவசுந்தரமூர்த்தி அடிக்கடி மணிவண்ணனது பெயரைச் சொல்லிக் கதைத்தமையால் சரவணன் மெதுவாக் வந்து அவர்கள் இருந்து கதைத்துக் கொண்டிருந்த அறைக்குப் பக்கத்தில் மறைந்து நின்றான்.

“பயமில்லையே? மணிவண்ணன் செல்வாக்கான ஆள். காசுக்காரன். என்ன விலை கொடுத்தென்றாலும் எதையும் விலைக்கு வாங்கிப் போடுவன். அவனுக்கு இருக்கிறது ஒரே ஒரு பிள்ளை. அதை நினைக்கத்தான் எனக்குப் பயமாக இருக்கிறது” என்றான் சின்னத்தம்பி.

“கதைத்கேக்கை வீராப்புப் பேசுவாய். செய்யச் சொன்னால் பயந்து நடுங்குவாய். எல்லாத்துக்கும் நான் இருக்கிறன் பயப்படாதை” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“பட்டனத்திலை உள்ள காவல்துறை தலைமை அதிகாரி எனக்குத் தெரிந்தவர். மணிவண்ணனின் மகளைக் கடத்த முன்னம் நான் எல்லா விபரங்களையும் சொல்லி அவருக்குக்

கொஞ்சக் காசு குடுக்கிறன். நீ ஒற்றுமையான பிறகு நான் செலவு செய்த காசைத் தா'' என்றான் கருணாகரன்.

''நாளைக்குப் பள்ளிக்கூடம் விட்டாப் பிறகு ரவீந்திரன் மேலதிக வகுப்பு வைப்பார். வகுப்பு முடிய எப்படியும் ஐந்தரை மணியாகும். அதுக்குப் பிறகு துவிச்சக்கரவண்டியை எடுத்துக் கொண்டு தர்சினி ஆலடிச் சந்திக்குவர ஆறுமணிக்க மேலையாகிவிடும். ஆலடிச் சந்தி கழியவரும் வெளியிலை சனநடமாட்டம் குறைவு. தர்சினியும் மாலதியும் வருவினை. கருணாகரன்ரை மோட்டார் வண்டியை வீதியோரத்திலை விட்டு பழுது பார்க்கிற மாதிரி பாருங்கோ. தர்சினி வந்தவுடனை பலாத்காரமாய்த் தூக்கி ஏத்துங்கோ'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''அண்ணை நீங்களும் ஒரு பொம்பிளைப் பிள்ளையை வைத்திருக்கிறியள். தர்சினி விரும்பினால் பரவாய் இல்லை..........'' சின்னத்தம்பி கதைத்துக் கொண்டிருக்கும் போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டார்; ''விரும்பினால் கடத்த வேணுமே? பொடியனிட்டைச் சொன்னால் துவிச்சக்கரவண்டியிலை ஏத்தியந்திடுவன், பேய்க்கதை கதையாதை.'' கோபமாக ஏசினார் சிவசுந்தரமூர்த்தி.

''குமர்ப் பிரச்சினை. பழி தீராது. தீய செயல்கள் தீமையைத்தான் அண்ணை தரும். அவள் விரும்பாமல் இருக்கேக்கை பலாத்காரமாய் கடத்திறது, கொலை செய்வதால் வரும். பழியைவிடக் கூடுதலானது. அந்தப் பாவம் தீயைப் போலக்

கொடுமையானது. என்னதான் சமாதானம் சொன்னாலும் அதை என்னாலை ஏற்க முடியவில்லை'' என்றான் சின்னத்தம்பி. நன்றாக அவன் குடித்திருந்த போதும் அவனுக்குப் பயமாக இருந்தது. பெரும் பணக்காரனான மணிவண்ணன் தன்னையும் தனது குடும்பத்தையும் பழி வாங்கி விடுவானெனப் பயப்பட்டான். ''பாவம் பெரும் தீயைப் போன்றது. அது பற்றி எரிந்தால் அணைக்க முடியாது'' என்று அடிக்கடி அவனது பேரனார் கூறுவது அவனது காதில் ஒலித்தது.

''நீ ஒன்றும் கதைக்கக் கூடாது. நாளைக்கு மூன்று மணிக்கு வீட்டை வா. கருணாகரன் மிச்சத்தைச் செய்வான்'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

சரவணனுக்கு வியர்த்துக் கொட்டியது. தனது தந்தையானாலும் பரவாயில்லை. தீய செயல்கள் செய்வோர் தண்டிக்கப்பட வேண்டும் என்று நினைத்தான். அவனுக்கு இரவு முழுவதும் நித்திரை வரவில்லை.

மறுநாள் ஐந்துமணிக்கு கருணாகரனும் அவனது மோட்டார் வண்டிச் சாரதியும் ஆலடி வெளியில் நின்றனர். சாரதி மோட்டார் வண்டியின் முன் பகுதியைத் திறந்து இயந்திரத்தைத் திருத்துவது போல் பாவனை செய்து கொண்டிருந்தான்.

ஐந்தரை மணிக்கு சுந்தரமும் சின்னத்தம்பியும் வந்தனர்; ''எனக்கெண்டால் விருப்பமில்லை. இராத்திரி தம்பியைக் கேட்டனான். தனக்கு விருப்பமாம். ஆனால் அவளுக்கு விருப்பமில்லையாம். செருப்பைக் கழற்றிக்

காட்டுறாளாம். இந்த நிலையிலை நாங்கள் கடத்தி என்ன செய்யிறது.'' நடுங்கினான் சின்னத்தம்பி.

கருணாகரன் சின்னத்தம்பியைப் பார்த்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஏளனமாகச் சிரித்தபடி சொன்னான்; ''நான் மணிவண்ணனைப் பழிவாங்க நினைச்சிட்டன். இனி அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. வலியவாற சீதேவியை காலாலை தள்ளாதை'' என்றான்.

அப்பொழுது வீதியால் தர்சினியும் மாலதியும் வந்தனர். அவர்களைக் கண்டதும் கருணாகரன் சொன்னான்; ''மோட்டார் வண்டியை இயக்கு. சுந்தரம் என்னோட வா........''

வீதியால் துவிச்சக்கரவண்டியில் வந்த தர்சினியை வழிமறித்த கருணாகரன், தர்சினியின் அருகே சென்றான். அப்பொழுது வேகமாக வந்துநின்ற வாகனமொன்றில் இருந்து காவல்துறையினர் இறங்கினர். கருணாகரன் திகைத்துப் போனான். காவல்துறையினர் நால்வரையும் கைது செய்தனர். காவல்நிலையத்தில் சின்னத்தம்பி எல்லாவற்றையும் ஒளிவுமறைவின்றிக் கூறிவிட்டான். அதனால் சிவசுந்தரமூர்த்தியைக் காவல்துறையினர் கைதுசெய்து நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றனர்.

''ஓர் உயர் அதிகாரியாக நீர் இருந்து கொண்டு செய்யக்கூடாதவற்றைச் செய்துள்ளீர். ஒரு பெண்ணை அவளின் விருப்பமின்றிக் கடத்துவது மிகப் பெரிய குற்றம். அதற்காக மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்தல்

வேண்டும். நீர் நோயாளி என்பதால் கருணை காட்டி உம்மைச் சிறையிலிருந்து விடுவிக்கும்படி மணிவண்ணன் கேட்டுள்ளார். எனவே நீர் ஐம்பதினாயிரம் ரூபா பணத்தை அனாதை இல்லத்திற்குக் கொடுக் கும்படி தீர்ப்பளிக்கிறேன்'' என்றார் நீதிபதி.

சின்னத்தம்பிக்கும், சுந்தரத்திற்கும், கருணாகரனுக்கும், மோட்டார் வண்டிச் சாரதிக்கும் இருவருடகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

202 தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

தீய செயல்கள் எப்பொழுதும் தீமை விளைவிக்குமாதலால், தீய செயல்களை தீயைவிடக் கொடியதாகக் கருதி அஞ்சுதல் வேண்டும்.

# தலை

மணிவண்ணன் விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்திப்பதற்காக தணிகாசலத்தையும் வேலாயுதபிள்ளையையும் அழைத்துக் கொண்டு விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தான். அப்பொழுது இரவு ஒன்பது மணி.

“வாருங்கோ” என்று அவர்களை வரவேற்றார் விக்னேஸ்வர மூர்த்தி.

“இந்த நேரம் வந்தால் தான் உங்களை வீட்டில் சந்திக்கலாம். அதுதான் வந்தனாங்கள்” என்றான் மணிவண்ணன்.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசாமல் சிரித்தார்; “எனக்கெண்டால் ஒருவரைப் பழிவாங்குவது விருப்பமில்லை. அறிவில்லாதவன் ஆராயாமல் தீமைகள் செய்கிறானென்றால் அறிவுள்ளவனும் அவர்களுக்குத் தீமை செய்ய வேண்டுமா......? அதுதான் உங்களோடு ஆராய்ந்து விட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்களை விடுவிக்கும்படி நீதிமன்றத்திற்கு மனு அனுப்பலாம் என்று நினைக்கிறேன்” என்றான் மணிவண்ணன்.

“குற்றம் செய்தவன் அக்குற்றத்தை உணரல் வேணடும். ஒருவன் தனது அறிவைக் கொண்டு நல்லது தீயதைப் பகுத்து ஆராய வேண்டும். ஆராயமல் தவறு செய்தால் தண்டனைதான் அவனைத் திருத்தும். உயர்கல்வி கற்று உயர்ந்த உத்தியோகத்திலுள்ள சிவசுந்தரமூர்த்தி எவ்வளவு தீயசெயல்களைச் செய்கிறான். அவனைத் திருத்த வேண்டுமானால் சிறையில் அடைக்க வேண்டும்” என்றார் வேலாயுதபிள்ளை.

“தீய செயல்கள் தீயைப் போன்று தன்னைச் சுட்டுச் சாம்பராக்கும் என்று தெரிந்தும் செய்பவனைச் சிறைக்கூடம் கூடத் திருத்தாது. குற்றச் செயல்கள் செய்ததால் சிறையில் அடைக்கப்பட்ட

பலர் சிறையால் திரும்பி வந்து மீண்டும் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்களே தவிர திருந்துவோர் மிகவும் குறைவு. சிவசுந்தரமூர்த்தி பெரும் நோயாளி. சிறையில் தற்செயலாக இறந்துவிட்டால் அவனது மனைவியும் மக்களும் இனத்தவர்களும் ஊரவர்களும் என்னால் தான் அவன் இறந்ததாகக் கூறுவார்கள். அதனால் எனது மனம் தினமும் அல்லற்படும். அத்துடன் எனது மகளின் வாழ்வும் பாதிக்கப்படும். அதனால் தான் சிவசுந்தரமூர்த்தியை விடுதலை செய்யும்படி நீதிமன்றத்தைக் கேட்டேன்'' என்றான் மணிவண்ணன்.

``அவர்கள் இரகசியமாகத் திட்டமிட்டது உங்களுக்கு எப்படித் தெரிய வந்ததென்று எங்களுக்குப் புரியவில்லை. நாம் அறிந்து கொள்ளலாமென்றால் அதைத் தயவு செய்து சொல்லுங்கள்'' என்றார் தணிகாசலம்.

``மகாகணபதிதான் வந்து சொன்னவர்;'' என்றார் விக்னேஸ்வர மூர்த்தி.

தணிகாசலம் சிரித்தார்; ``என்ன தணிகாசலம் சிரிக்கிறாய்? உனக்கு மகாகணபதியிலை நம்பிக்கையில்லையா.......?''

``ஐயையோ ஆர் அப்படிச் சொன்னது மகாகணபதி சர்வவல்லமை உள்ளவர் எனக்கு நேர்ற துன்பங்களையெல்லாம் தீர்த்து வைக்கிறவர்''

``ஒருவனுக்குத் துன்பம் வருவதை கடவுள் விரும்புவதில்லை. அதனால் அவர் எப்படியோ, யார்

மூலமாகவோ சம்பந்தப்பட்டவனுக்கு அறிவித்து விடுவார். ஒருவன் தனது அறிவை நல்ல முறையில் பயன்படுத்தினால் துன்பம் வராது. நான் மணிவண்ணனுக்கு இச்செய்தி யாரால் எனக்குத் தரப்பட்டதென்று கூறியமையால்தான் மணிவண்ணன் சிவசுந்தரமூர்த்தியைச் சிறைக்கு அனுப்பாது மன்னித்தான்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நீங்கள் எங்களைக் குழப்புறியள்'' என்றார் தணிகாசலம்.

''நத்தைககுள்த்தான் முத்து உருவாகுகிறது. சேற்றில்தான் தாமரை மலர்கிறது. அதைப் போல சிவசுந்தரமூர்த்தி கெட்ட குணங்களை உடையவனானாலும் அவரது மகன் ஒழுக்கமானவன். நல்லவன். தகப்பனும் நண்பர்களும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு விடியு முன்பே வந்து எனக்குச் சொல்லி விட்டான். அதனால்தான் பெரியதொரு தீயசெயல் நடைபெறாமல் தடுக்கப்பட்டது. நீங்கள் யாருக்கும் இதைப்பற்றிச் சொல்லாதீர்கள். அதனால் வயதில் குறைந்த சரவணனுக்குப் பாதிப்பு ஏற்படும்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நல்லவர்களுக்கு எப்பொழுதும் கடவுள் துணையாக இருப்பார். ஆதனால் அவர்களுக்குத் தீமை செய்ய யாராலும் முடியாது. அறிவு, கற்றல் மூலம் வரும். மேலான அறிவு நல்ல செயல்கள் மூலம்தான் வரும். ஒருவன் தனக்குப் பிறர் செய்யும் தீமையை மறந்து, அவனுக்குத் தீமை செய்யாது, அவனை மன்னித்து அவனுக்கு உதவி செய்வதே

மேலான அறிவு என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. அதையே மணிவண்ணன் செய்ய விரும்புகிறார்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

203 அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

தமக்குத் தீமை செய்வோரையும் மன்னித்து, அவர்களுக்கு தீய செயல்களைச் செய்யாதிருத்தலே மேலான அறிவாகும்.

# மறந்தும் எண்ணாதே

மணிவண்ணனும் வேலாயுதபிள்ளையும் விக்னேஸ்வர மூர்த்தியும் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தனர். சிவசுந்தரமூர்த்தி அவர்கள் வருவார்கள் என எதிர்பாராததால் திகைத்துப் போனார். தான் செய்த பெரும் தீமையை மறந்து, மன்னித்து தனக்கு விடுதலை தேடித்தந்த மணிவண்ணனை நிமிர்ந்து அவரால் பார்க்க முடியவில்லை. அதனால் தடுமாறியபடி "வாருங்கோ வாருங்கோ'' என்று வரவேற்றார்.

உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்த மூவரும் சில கணங்கள் பேசாமல் இருந்தனர். தனது வீட்டுக்கு வந்தவர்களை சிவசுந்தரமூர்த்தியால் வரவேற்று உபசரிக்க முடியவில்லை. அதனால்; “சரவணன், கஜேந்தினி” என்று அழைத்தார். வேலாயுதபிள்ளையையும் விக்னேஸ்வரமூர்த்தியையும் தெரிந்திருந்த கஜேந்தினிக்கு மணிவண் ணனைத் தெரியவில்லை. அதனால் முகமலர்ந்து சிரித்தாள்; “எனக்கு இவரை அப்பா என்று சொல்லவே வெட்கமாக இருக்கிறது. பாடசாலையில் என்னை யாரும் மதிக்கிறார்கள் இல்லை”. என்றாள் கஜேந்தினி. அவளது குரல் தழுதழுத்தது.

“இவருடைய செயல்களால் உங்களுக்கும் பாதிப்புத்தான். உன்னுடைய கலியாணம் குழம்புறத்திற்கும் உவர்தான் காரணம். இதுகளெல்லாம் தெரிந்திருந்தும் திருந்திறாரில்லையே. இப்ப இரண்டு வருசமாவது சிறையில் இருந்திருக்க வேண்டியவர் மணிவண்ணனின் தயவால் வீட்டை வந்திருக்கிறார். இனியெண்டாலும் திருந்த வேணும்” என்று வேலாயுதபிள்ளை கூறிக்கொண்டிருக்கும் போது கஜேந்தினி குறுக்கிட்டுச் சொன்னாள்; “இவர் திருந்த மாட்டார் மாமா. இவருடைய வளர்ப்பு முறைதான் எனது போக்கையும் மாற்றியது. அப்பாவினுடைய திமிரான நடத்தையும் அறமில்லாத பேச்சையும் நானும் பின்பற்றினதாலைதான் என்னுடைய குணமும் மாறியது. அதனால் நானும் அடுத்தவர்களுடன் திமிராக நடந்திட்டன். அதனால் தான் என்னுடைய வாழ்வு பாதிக்கப்பட்டது. பெற்றோர் தமது பிள்ளைகள் நல்ல

முறையில் வாழவேண்டுமென்று நினைத்தால், தாங்கள் திருந்தி முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட வேணும்....''

''சரி...சரி.. இனி உதைவிடு. இவ்வளவு காலமும் திருந்தாத சிவசுந்தரமூர்த்தி இனியும் திருந்தாட்டில் வாழுறத்திலை பிரயோசனமில்லை. மறந்தும் கூட பிறருக்குத் தீமை செய்ய நினைக்கக்கூடாது. செயல்கள் மட்டுந்தான் பாவத்தை தருவன அல்ல. எண்ணங்களும் பாவத்தைத் தரும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால்தான் சிவசுந்தரமூர்த்தி அடுக்கடுக்காக எனக்கும் அதிபருக்கும் மணிவண்ணனுக்கும் தணிகாசலத்திற்கும் தீங்குகள் செய்தபோதும் நாம் திருப்பித் தீங்கு செய்ய நினைப்பதில்லை. அதனால் பிறர் தீமை செய்தாலும் அது எமக்கு நன்மையாக முடிவடைகிறது. மணிவண்ணனின் மகளைக் கடத்தியிருந்தால் என்ன நடைபெற்றிருக்கும். ஒன்றும் அறியாத அப்பெண்ணின் வாழ்வு நாசமாய்ப் போயிருக்கும். அறத்தின்படி வாழும் மணிவண்ணன் துயர மேலீட்டால் இறந்தும் இருப்பான். அவையெல்லாம் நடக்கக் கூடாதென்பதற்காகத்தான் கடவுள் உரிய நேரத்தில் எமக்குத் தீமை வரப்போகுதென்று அறிவித்திருக்கிறார்'' என்றார் வேலாயுதபிள்ளை.

சிவசுந்தரமூர்த்தி விம்மி விம்மி அழுதார். அதைக்கண்ட விக்னேஸ்வரமூர்த்தி வேலாயுதபிள்ளையை ஏசினார் ; ''வேலாயுதம் முடிந்த சம்பவங்களைப் பற்றிக் கதையாதை. சிலநேரம் உன்ரை கதைகளால் சிவசுந்தரமூர்த்திக்கு நோய் அதிகரிச்சிடும்''.

“அவருக்கு ஒரு வருத்தமும் இல்லை ஐயா, தீமையான செயல்களைச் செய்துவிட்டு அகப்பட்டதாலை வருத்தம் மாதிரி நடிக்கிறார்” என்றாள் கஜேந்தினி.

“இப்ப என்னுடைய பிள்ளைகளோ மனைவியோ என்னை ஒரு மனிதனாக மதிப்பதில்லை” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“எப்படி மதிக்குங்கள். நீ மனிதனாக நடந்தால்தானே அவை உன்னை மனிதனாக மதிப்பினை” என்றார் வேலாயுதபிள்ளை.

“நீங்கள் இப்ப அவரைப் பேசவே வந்தனீங்கள். செயல்களால் மட்டும் பாவம் வருவதில்லை. எண்ணங்களாலும் பாவம் வரும் என்று சொல்லிவிட்டு நீங்களே கடும் சொற்களைக் கூறினால் எப்படி.....? அதைவிட்டுவிட்டு வந்த விசயத்தைச் சொல்லுங்கோ” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“நீங்கள் பெருந்தீமைகளைச் செய்தாலும் உங்கள் மகன் சரவணன் ஒழுக்கமானவன். மற்றவர்கள் நல்லபடி வாழ வேண்டும் என்றும், அவர்களுக்குத் தீமை வரக்கூடாதென்றும் விரும்புபவன். அதனால் தான் மணிவண்ணன் தனது சகோதரனுக்கு உங்கள் மகளைப் பெண் கேட்டு வந்திருக்கிறார். மாப்பிள்ளை வெளிநாட்டில் பொறியியலாளராகக் கடமையாற்றுகிறார்” என்றார் வேலாயுதபிள்ளை.

சிவசுந்தரமூர்த்தியால் தனது காதுகளை நம்ப முடியவில்லை. "நான் தினமும் எல்லோருக்கும் பெருந்தீமைகளைச் செய்கிறேன். ஆனால் சிலரால் மறந்தும்கூட மற்றையோர்க்குத் தீமைகள் புரியவேண்டும் என்ற எண்ணம் கூட வருவதில்லையே" என்று நினைத்தார்.

"விரும்பினால் குறிப்பைத் தாருங்கோ. பொருந்தினால் செய்வம்" என்றான் மணிவண்ணன்.

"குறிப்பை எடுத்தா பிள்ளை" என்றார் சிவசுந்தரமூர்த்தி. கஜேந்தினி உள்ளே சென்று குறிப்பை எடுத்துக் கொண்டு வந்து சிவசுந்தரமூர்த்தியிடம் கொடுத்தாள். சிவசுந்தரமூர்த்தி அதை வாங்கி மணிவண்ணனிடம் கொடுத்தார். அவரால் மணிவண்ணனது முகத்தைப் பார்த்துப் பேச முடியவில்லை.

"நாங்கள் வாறம். சாதகம் பொருந்தினால் வேலாயுதண் ணையிட்டைச் சொல்லி அனுப்புறன்" என்று கூறிவிட்டு எழுந்து நடந்தான் மணிவண்ணன். அதிபரும் வேலாயுதபிள்ளையும் அவனின் பின்னே சென்றனர். சிவசுந்தரமூர்த்தி அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு நடப்பதெல்லாம் கனவு போல இருந்தது.

204 மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்

அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.

பிறருக்கு கேடு விளைவிக்கும் தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக் கூடாது. எண்ணினால் எண்ணுபவனுக்கு அறம் கேட்டை உண்டாக்கும்.

# வறுமையுள் வறுமை

மணிவண்ணன் தனது மகளைக் கடத்திய வழக்கை மீளப் பெற்றதால் கருணாகரனும் சாரதியும் சுந்தரமும் சின்னத்தம்பியும் விடுதலையானார்கள். கருணாகரன் விடுதலையானதும் சிவசுந்தர மூர்த்தியின் வீட்டுக்கு வந்தான். சிவசுந்தரமூர்த்தி அவனை முற்றத்தில் வைத்துக் கதைத்தார்.

“எனக்கு இப்ப வருத்தம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதனால் வேலையிலிருந்து ஓய்வு பெற நினைக்கிறேன். அத்துடன் தேவையில்லாத விடயங்களில் தலையிடுவதாலும், தேவையில்லாத கதைகளைக் கதைப்பதாலும்தான் எனக்கு நோய் அதிகமாகியுள்ளதென்று வைத்தியர் கூறுகிறார். அதனால் நான் அமைதியாக வாழ விரும்புகிறேன். தயவு செய்து இனிமேல் எனது வீட்டுக்கு வரவேண்டாம” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

அவரது கதை கருணாகரனுக்குப் பிடிக்கவில்லை. “பேசாமல் இருந்த எம்மை மணிவண்ணனுக்கு எதிராக நீங்கள் தூண்டிவிட்டு

விட்டு இப்போது நல்லவனாகக் காட்டிக் கொள்ள விரும்புகிறீர்கள். உங்களுடைய தீயவார்த்தைகளைக் கேட்டுத்தான் நாம் பல தீய செயல்களைச் செய்தோம்'' என்றான் கருணாகரன் கோபமாக.

''நடந்ததைக் கெட்ட கனவாக நினைத்து மறந்து விடு. இனிமேல் என்றாலும் என்னைத் திருந்தி நல்லவனாக வாழ விடு.''

''நீங்கள் கடைசி வரையும் திருந்த மாட்டீர்கள். மணிவண்ணன் ஏதோ கள்ள நோக்கத்துடன்தான் உங்களிடம் வந்து சம்மந்தம் பேசியுள்ளான். இந்தக் காலத்தில் தீமை செய்தவனுக்கு யாராவது நன்மை செய்வார்களா...? உதில் ஏதோ கள்ள நோக்கம் இருக்கிறது. அது காலப்போக்கில் வெளிப்படும். தீய செயல்கள் செய்பவனின் குடும்பம் ஒரு போதும் நல்லாய் இராது என்று சொல்லுவார்கள். அப்படியிருக்க நீ எப்படி நல்லாய் இருப்பாய். மணிவண்ணனின் சகோதரனுக்கு எத்தனையோ இடங்களில் சம்மந்தம் பேசிக் குழம்பியது. அவன் சின்ன வயதிலேயே பெரும் குடிகாரன். வெளிநாட்டில் இருக்கிறவனுக்கு உங்களுடைய மகளையே திருமணம் பேச வேணும். அதோடை பெண்வீட்டார்தான் கலியாணம் பேசிப் போவது முறை. உங்களுடைய மகள் திமிர் பிடிச்சவள். அதோடை நீங்கள் படுபாதகமான செயல்கள் பலவற்றைச் செய்தனீங்கள். அப்படியிருக்க உங்களைத் தேடிவாறதாய் இருந்தால் மாப்பிள்ளை ஏதோ ஒரு வழியில் நடத்தைப் பிழையுள்ளவராய் இருக்க வேணும். ஏன் உள்ளதையே சொல்லுறன். அவன் படிக்கேக்கை பக்கத்து வீட்டுப் பெட்டையைக்

கூட்டிக் கொண்டு போய் ஒருமாதம் வைச்சிருந்தவன். மணிவண்ணன் தங்களிலும் பார்க்க தராதரம் குறைந்தவர்கள் என்று சொல்லிப் பிரிச்சுத்தான் அவனை வெளிநாட்டிக்கு அனுப்பினவன். பெட்டை இப்பவும் கலியாணம் கட்டாமல் இருக்கு. வேணுமெண்டால் சபாநாயகத்தைக் கேட்டுப் பார். நான் கெட்டவனாக இருந்தாலும் நம்பினவர்களுக்குத் துரோகம் செய்யமாட்டன்...'' என்று கூறிவிட்டு சிவசுந்தரமூர்த்தியின் பதிலை எதிர்பாராது நடந்தான் கருணாகரன்.

“கருணா.... கருணா.......'' என்று பலமாகக் கூப்பிட்டார் சிவசுந்தரமூர்த்தி. எனினும் கருணாகரன் திரும்பிப் பாராது சென்றுவிட்டான்.

கருணாகரன் சென்ற பின்பு சிவசுந்தரமூர்த்தியின் மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. மணிவண்ணனின் சகோதரன் நல்லவனாக இருந்தால் இவ்வளவு நாட்களும் ஏன் திருமணம் செய்யாது இருக்கிறான்? நான் தீமை செய்த பின்பும் ஏன் என்னைத் தேடி வந்தான்? ஒருவேளை என்னைப் பழிவாங்கவோ.....? அதிபரும் வேலாயுதபிள்ளையும் கெட்டவர்களுக்குத் துணை போகமாட்டார்கள் என்று நினைத்தபோது ஆறுதல் அடைந்திருந்த சிவசுந்தர மூர்த்தியின் மனம் அதிபருக்கும் வேலாயதபிள்ளைக்கும் மணிவண்ணன் மறைத்திருக்கலாம் என்று நினைத்த போது அவரின் நெஞ்சு வலித்தது. எதற்கும் சபாநாயகத்தைக் கேட்டுப் பார்த்தால் தெரியும் என்று நினைத்தார்.

கருணாகரன் சிவசுந்தரமூர்த்தியைச் சந்தித்துவிட்டு சபாநாயகத்தின் வீட்டுக்குச் சென்றான். அவனைக் கண்ட சபாநாயகத்திற்கு அருவருப்பாக இருந்தது.

“சபா , நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேணும். சிவசுந்தரமூர்த்தி எம்மை மணிவண்ணனின் மகளைக் கடத்தும்படி தூண்டிவிட்டு விட்டு இப்பொழுது அவனது சகோதரனுக்குத் தனது மகளைக் கலியாணம் பேசுறார். அந்தக் கலியாணத்தை நடக்கவிடக்கூடாது. நான் சொல்லுறபடி நடந்தியெண்டால் நான் உனக்குக் காசு தருவன். மணிவண்ணனின் சகோதரன் ஏற்கனவே ஒரு பெண்ணைக் கலியாணம் செய்தவன் என்று நீ சொன்னால் சரி. மிச்சத்தை நான் பார்க்கிறன். இதை எனக்காக நீ செய்யவேணும்” என்று கூறிவிட்டுச் சென்றான் கருணாகரன்.

சபாநாயகம் எதுவும் பேசவில்லை. கருணாகரன் சென்ற பின்பு சரவணன் சபாநாயகத்தின் வீட்டுக்கு வந்து தகப்பனார் சபாநாயகத்தை உடன் வரச் சொன்னதாகச் சொன்னான்.

சபாநாயகம் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தபோது சிவசுந்தரமூர்த்தி வெளி விறாந்தையில் சபாநாயகத்திற்காகக் காத்திருந்தார். சபாநாயகத்தைக் கண்டதும் “வா சபா” என பரபரப்புடன் வரவேற்றார்; “சபா, தயவுசெய்து உள்ளதை மறைக்காமல் சொல்லு. ஒரு பெண்ணின்ரை வாழ்க்கைப் பிரச்சினை. உனக்கும் இரண்டு குமர் இருக்கு. மணிவண்ணன்ரை

தம்பியார் பக்கத்துவீட்டுப் பெட்டையொன்றை படிக்கேக்கை கூட்டிக் கொண்டு போனவனாம்.''

''சொல்லுவார் சொன்னால் கேட்பவர்களுக்கு மதியென்ன? மணிவண்ணன் வேற்றூரவன். நாலைந்து வருடமாகத்தான் எமக்கு அவனைத் தெரியும். அதோடை அவன்ரை குடும்பப் பிரச்சினைகள் எதுவும் எமக்குத் தெரியாது. அவன் பெரிய பணக்காரன். அவனைப் பற்றி எனக்கு மட்டுமில்லை, வேலாயுதபிள்ளைக்கோ, தணிகாசலத்திற்கோ இல்லை அதிபருக்கோ ஒன்றும் தெரியாது.......'' என்றான் சபாநாயகம்.

''அப்ப ஏன் கருணாகரன் இப்படிச் சொன்னவன்?''

''உங்களுக்கு அவனைத் தெரியாதே. பேசுறதெல்லாம் பொய்யும் புரட்டும். உங்களோடை கதைச்சுப் போட்டு என்னுடைய வீட்டுக்கு வந்து என்னைத் தான் சொன்னபடி சொல்லச் சொன்னவன். அப்படிச் சொன்னால் காசு தாறதெண்டவன். நான் முந்தின ஆளென்றால் வறுமை காரணமாகச் சொல்லியிருப்பன். அதாலை நான் பெரும் கஸ்டப்பட்டனான். நான் வறியவன் என்று நினைத்துத் தீய செயல்களைச் செய்தால் வறுமை தீராது. மேலும் மேலும் வறுமை அதிகரிக்குமென்று தணிகாசலம் அடிக்கடி சொல்லுறவர். அது உண்மை என்பதைப் புரிந்து கொண்டன். எனக்கு மணிவண்ணனது குடும்பத்தைப் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் வேலாயுதபிள்ளையும் அதிபரும் தீயவற்றைச் செய்ய மாட்டினை. தீயவர்களோடு சேரவும் மாட்டினை.

எனவே நீங்கள் பயமில்லாமல் உங்கடை மகளுக்குத் திருமணத்தைச் செய்து கொடுக்கலாம்'' என்றான் சபாநாயகம்.

சிவசுந்தரமூர்த்தி மகிழ்வுடன் சிரித்தார்.

205 இலன் என்று தீயவை செய்யற்க செய்யின்

இலன் ஆகும் மற்றும் பெயர்த்து

வறியவன் , யான் வறியவன் என நினைத்துத் தீய செயல்களைச் செய்யக் கூடாது. செய்தால் அவன் வறுமையில் இருந்து மீள மாட்டான்.

# விரும்பாதவன்

கருணாகரன், மணிவண்ணனின் சகோதரனைப் பற்றி நாவலடிக் கிராமத்தில் கட்டிவிட்ட கட்டுக் கதையை மக்கள் பரபரப்பாகப் பேசிக் கொண்டனர். இதை அறிந்து கவலைப்பட்ட மணிவண்ணன் வேலாயுதபிள்ளையிடம் வந்தான். ‘‘வேலாயுதண்ணை எமது குடும்பம் ஒழுக்கமானது. அதைவிட எனது தம்பி மிகவும் நல்லவன். ஒழுக்க சீலன். பெண்களை

இச்சைப் பட்டு நோக்காதவன். அப்படியிருக்க கருணாகரன் ஊரில் தம்பியைப் பற்றி தவறான கதைகளைப் பரப்பியிருக்கிறான். இது எனக்கு வேதனையைத் தருகிறது. கருணாகரன் சபாநாயகத்திடம் சென்று எனது தம்பி முன்பு ஒரு பெண்ணைக் காதலித்துக் கலியாணம் செய்துவிட்டு ஏமாற்றியதாகக் கூறும்படி சொல்லியிருக்கிறான். சபாநாயகம் முன்னைய ஆளாக இருந்திருந்தால் எவ்வளவு விபரீதங்கள் நடந்திருக்கும். இப்ப அவன் திருந்தியமையால் வீடு தேடி வந்து சொன்னான். இதுகளை நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது" என்றான்.

"ஒரு காரியத்தைச் செய்வதானால் பல பிரச்சினை களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். அத்துடன் கெட்டவர்கள், குடிகாரர்கள் பேசுவதை நாம் பெரிதாக எடுத்தால் வாழ முடியாது. ஊரில் பேசப்படுவதை நானும் கேள்விப்பட்டேன். பெரும்பாண்மையான மக்கள் அதை நம்பவில்லை" என்றார் வேலாயுதபிள்ளை.

அப்போது அங்கு வந்த தணிகாசலம் சொன்னார்; "தன்னைத் தானே அழித்தலை விரும்பாதவன் தீயவற்றைப் பிறருக்குச் செய்ய மாட்டான். உனக்கும் ஒரு குமர் இருக்கிறது. நீ இன்னொரு குமருக்குத் தீய செயல்களைச் செய்தாலோ அல்லது தீயன செய்யவேண்டுமென்று நினைத்தாலோ அப்பழி உன்னைச் சேருமே தவிர பிறரைச் சேராது. சிவசுந்தரமூர்த்தி எத்தனை பெண்களின் வாழ்வைப் புறங்கூறிக் கெடுத்தவன்.

அந்தப் பழிதான் அவனைச் சூழ்ந்துள்ளது. நீ வீணாகக் கவலைப்படாதே'' என்றார் தணிகாசலம்.

''மன ஆறுதலுக்காக நீங்கள் சொல்வதை ஒப்புக் கொண்டாலும் கவலையை என்னால் மறக்க முடியவில்லை. அதனால்தான் வேலாயுதண்ணையைக் கூட்டிக் கொண்டு சிவசுந்தரமூர்த்தியோடு கதைக்க வந்தேன். நீங்களும் வாருங்கோ போவம்'' என்றான் மணிவண்ணன். மூவரும் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றபோது சிவசுந்தரமூர்த்தி வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவர்களைக் கண்டதும் கவலையுடன் சொன்னார்; ''குருக்களிட்டைப் போவம் என்று புறப்பட்டனான். நீங்கள் வந்திட்டியள். உள்ளுக்கு வாருங்கோ..... இருங்கோ.....'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

நாற்காலியில் அமர்ந்த வேலாயுதபிள்ளை சொன்னார்; ''மணிவண்ணனுடைய தம்பியைப் பற்றி ஊரிலை தப்பாய்க் கதைக்கிறத்தாலை அதைப்பற்றிக் கதைக்க வந்தனாங்கள்'' வேலாயுதபிள்ளை கதைக்கும் போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டுச் சொன்னார்; ''எல்லாம் கருணாகரன்ரை வேலை. ஒவ்வொருவரும் செய்யிற பழி பாவங்கள் அவர்களையே சூழும் என்று தெரியாமல் நடந்து கொண்டதாலைதான் இப்படியான தீமை எனக்கு வந்திருக்கு. மணிவண்ணனுடைய குடும்பத்தைப் பற்றி நான் சந்தேகப்படவில்லை. ஏனென்றால் துன்பம் செய்யும் தீய செயல்கள் தன்னை வருத்துதலை விரும்பாதவன் தீய செயல்களைப் பிறருக்குச் செய்ய மாட்டான் என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதை

அனுபவ பூர்வமாக உணர்ந்தவன் நான். அத்துடன் மணிவண்ணன் மிகவும் நேர்மையானவன். பிறரின் பொருளில் ஆசைப்படாதவன். பிறருக்கு உதவி செய்பவன். அதனால் அவனால் மற்றவர்களுக்குத் தீமை செய்ய முடியாது.''

''மணிவண்ணன் உங்கள் வீட்டுக்கு வந்து பெண் கேட்டமையால் நீங்கள் தவறாக நினைத்து, ஊரவர் கதைப்பதை நம்பி விடுவீர்களோ என்ற பயத்தால்தான் மணிவண்ணன் எம்மைத் தேடி வந்தார். அவர் உங்களைத் தேடிவர பெரியதொரு காரணம் இருக்கு. அதை நாம் இப்ப சொல்ல மாட்டம்'' என்று தணிகாசலம் கூறும்போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டுச் சொன்னார்; ''எனக்கு அந்தக் காரணம் தெரியும். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு எனது மகன் சரவணன் என்னிடம் வந்து சொன்னான்; ''அப்பா ஊரில் எத்தனையோ பேர் நல்லவர்களாக, பிறருக்குத் தீமை செய்யாதவர்களாக வாழ்கிறார்கள். நீங்கள் ஏன் அடுத்தவர்களுக்குத் தீமை செய்கிறீர்கள். நான் மணிவண்ணனுக்குச் செய்த ஒரே ஒரு நன்மைக்காக அவர் எமது வீட்டில் பெண் எடுக்கிறார். மற்றவர்களுக்கு நன்மை செய்து பாருங்கள். உங்களுக்குப் பலர் நன்மை செய்ய முன் வருவார்கள். அன்று இரவு நீங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு நான்தான் அதிபரிடம் சொல்லி நீங்கள் செய்யவிருந்த தீய செயலைத் தடுத்தேன். எனினும் அதை உங்களுக்குத் தெரியப்படுத்தாததால் எனது மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருந்தது. அதனால்

எனது நிலையை அதிபருக்குக் கூறினேன். அவர் உங்களுக்குச் சொல்லும்படி சொன்னார்’’ என்றான். எனவே அதிபரும் நீங்களும் எனக்குத் துரோகம் செய்ய மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்’’ என்றார் சிவசுந்தரமூர்த்தி.

மணிவண்ணனுக்கு ஆறுதலாக இருந்தது; ‘‘நான் இந்தச் சம்பவத்தால் குருக்களிடம் கொடுத்த சாதகத்தைப் பற்றிக் கேட்கவில்லை.’’ என்றான் மணிவண்ணன்.

‘‘நான் குருக்களிட்டைச் செல்லத்தான் புறப்பட்டனான் என்றார் சிவசுந்தரமூர்த்தி.

206 தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால

தன்னை அடல்வேண்டா தான்.

தீமைகள் வராது இன்பமாக வாழ விரும்புகின்றவன் தீய செயல்களைத் தான் பிறருக்குச் செய்யாதிருத்தல் வேண்டும்.

# பகை நீங்காது

மணிவண்ணனும் சிவசுந்தரமூர்த்தியும் வேலாயுதபிள்ளையும் தணிகாசலமும் மகாகணபதி ஆலயத்திற்கு வந்தபோது, அங்கு மணிவண்ணனின் தங்கை ரோகினியின் கணவன் சண்முகலிங்கம் குருக்களுடன் கதைத்துக் கொண்டிருந்தான். இவர்களைக் கண்டதும் அவன் முகத்தை மறுபக்கம் திருப்பினான். பின் அவர்களைக் கவனிக்காதவன் போல் சென்று விட்டான்.

அவன் சென்றதும் குருக்கள் சொன்னார்; “மணி உமது மைத்துனருக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமில்லையாம். நீங்கள் உங்கள் சொந்த நன்மைக்காக தம்பியாரின் வாழ்க்கையைச் சீரழிக்கிறீர்களாம்”.

மணிவண்ணன் எதுவும் பேசவில்லை. சிவசுந்தரமூர்த்தி, மணிவண்ணன் தனது தங்கையோடு பிரச்சினைப் பட்டுப் பகையாக இருக்கிறான் என்று கேள்விப் பட்டிருக்கிறாரே தவிர விபரம் எதுவும் அவருக்குத் தெரியாது. அதனால் திருமணம் குழம்பி விடுமோ எனப் பயப்பட்டார்.

“எனது தங்கைக்கு நிறையச் சீதனம் கொடுத்துத்தான் நான் திருமணம் செய்து வைத்தேன். மைத்துனரும் ஒரு வியாபாரி. தேவையில்லாமல் என்னைச் சந்தேகப்படுகிறான். தனக்கு வரும் பொருட்களை நான் கொள்வனவு செய்கிறேனாம். அத்துடன் கருணாகரன் அவனது நண்பன். அவன் இல்லாதது பொல்லாததுகள் பலவற்றைக் கூறி எம்மைப் பிரித்து வைத்துள்ளான். அதனால் எனது தந்தையாரின் மரண வீட்டுக்குக் கூட அவன்

வரவில்லை. அத்துடன் எனது தங்கையையும் வர விடவில்லை. என்னை வேண்டாதவனாகவும், பகைவனாகவும் கருதுகிறான். எனது மனம் அறிய நான் எக்குற்றமும் செய்யவில்லை'' என்றான் மணிவண்ணன். அவனது குரல் தளம்பியது.

''மைத்துனனின் திருமணத்தில் தனக்கும் அக்கறை இருக்கிறதாம். அதனால் தன்னோடும் கலந்தாலோசிக்க வேண்டுமென் கிறான். அத்துடன் இன்னொரு பெண்ணின் சாதகக் குறிப்பைக் கொண்டு வந்து தந்துவிட்டுச் செல்கிறான். நான் என்ன செய்வது?'' என்று கேட்டார் குருக்கள்.

''அப்பாவின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளாத தங்கையும் மைத்துனரும் எமக்கு வேண்டாதவர்கள். அவர்களோடு உறவு வைக்கக் கூடாதென்று தம்பி கூறிவிட்டான். அத்துடன் அவர்கள் பலமுறை கடித மூலமும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்ட போதும் அவன் தொடர்பு கொள்ளவில்லை. சென்ற முறை அவன் வந்திருந்த போது கூட அவர்களின் வீட்டுக்குச் செல்லவில்லை. அத்துடன் நான் முழு விபரத்தையும் சொல்லித்தான் அவனிடம் சம்மதம் கேட்டேன். ஒத்துக் கொண்டு விட்டான். எனவே நீங்கள் குறிப்பைப் பாருங்கள்'' என்றான் மணிவண்ணன்.

''குறிப்பைப் பார்த்து விட்டேன். உமது சகோதரனின் சாதகம் பாவம் குறைந்தது. கஜேந்தினிக்குச் செவ்வாய்க் குற்றம் இருக்கிறது.

அத்துடன் செவ்வாய் கேதுவோடு சேர்ந்திருப்பதால் பொருந்துவது கஸ்டமாயிருக்கு'' என்றார் குருக்கள்.

சிவசுந்தரமூர்த்திக்கு கவலையாக இருந்தது. எத்தனையோ குறிப்புக்களைப் பார்த்தபோதும் பெரும்பாலானவை பொருந்துவதில்லை. பொருத்தமானவை பிரச்சினைகள் காரணமாகக் குழம்பி விடுகின்றன; ''எப்ப குருக்கள் சரிவரும்'' கவலையோடு கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

''கால நேரம் சரிவந்தால் நீங்கள் வீட்டிலை இருக்க மாப்பிள்ளை வந்து இறங்குவார். கவலைப்படாதைங்கோ. இந்த வருடம் கட்டாயம் நடக்கும்.'' என்ற குருக்கள் மணிவண்ணனின் பக்கம் திரும்பிக் கேட்டார்; ''உங்கட மைத்துனன் தந்தகுறிப்பைப் பார்க்கட்டா...?''

சில கணங்கள் யோசித்த மணிவண்ணன்; ''பார்க்க வேண்டாம் ஐயா. நான் அவனைப் பகைவனாகக் கருதவில்லை. ஆனால் அவன் என்னைப் பகைவனாக நினைத்து பல தீய செயல்களைச் செய்கிறான். அதனால் இந்தக் குறிப்பிலும் என்னென்ன செய்தானோ தெரியாது. நமது இதிகாச புராணங்கள் பகைவர்களுக்கும் தீமை செய்யக் கூடாது என்று கூறுகின்றன. பாண்டவர்கள் தமக்குத் தீமை செய்த கௌரவர்களைப் பகைவர்களாகக் கருதி தீமை செய்யவில்லையே. அத்துடன் போருக்குப் பொருத்தமான நல்ல நாளை சகாதேவன் துரியோதனனுக்கு எடுத்துக் கொடுத்தான். ஏனென்றால் எவ்வளவு கொடிய பகை உள்ளவர்களும் அப்பகையில் இருந்து தப்பி வாழலாம். ஆனால்

தீயவை செய்வதால் வரும் தீவினையாகிய பகையில் இருந்து தப்ப முடியாது. அது செய்தவனைப் பழி நிச்சயமாக சூழ்ந்து வருத்தும். அதனால் நான் பகைவனுக்குக் கூட தீங்கு செய்வதில்லை''. என்றான் மணிவண்ணன்.

"கருணாகரன் தீய செயல்கள் செய்வதை விடமாட்டான் போலத் தெரிகிறது. இந்தக் கல்யாணப் பிரச்சினையில் எத்தனை கரைச்சல் கொடுக்கிறான்.'' என்றார் தணிகாசலம்.

"தம்பியாரோடு தொலைபேசியில் ஒருமுறை இதைப் பற்றிக் கதைப்பது நல்லதென்று நினைக்கிறன்'' என்றார் வேலாயுதபிள்ளை.

"நான் எல்லாம் கதைச்சிட்டன். தீமை செய்ய வேண்டுமென்று நினைப்பவர்களை எம்மால் எதுவும் செய்ய முடியாது. அவர்களாகத் திருந்தினால் தான் மனிதர்களாவார்கள்'' என்று பெருமூச்சு விட்டான் மணிவண்ணன்.

207 எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை

வீயாது பின்சென்று அடும்.

எவ்வளவு கொடிய பகையை உடையவனும் தப்பி வாழலாம். ஆனால் தீய செயல்களைச் செய்வதால் வரும் பகை அவனைப் பின்தொடர்ந்து சென்று வருத்துவதால் அதிலிருந்து அவனால் தப்ப முடியாது.

# நிழல்

மணிவண்ணனின் மைத்துனன் சண்முகலிங்கம், வேலாயுத பிள்ளையைத் தேடி வேலாயுதபிள்ளையின் வீட்டுக்கு வந்தான். ஒரு போதும் வீட்டுக்கு வராத அவன் வீடு தேடி வந்திருப்பது ஏதாவது கெடுதலுக்காகத்தான் இருக்கும் என்று வேலாயுதபிள்ளை நினைத்தார்.

‘‘வேலாயுதண்ணை நீங்கள் மணிவண்ணனுடன் நல்ல முறையில் பழகுவதால் தான் நான் வீடு தேடி வந்தேன். நீங்கள் நினைக்குமாற் போல் மணிவண்ணன் அவ்வளவு நல்லவனல்ல. தன்னோடு கூடப் பிறந்த தங்கைக்கே பல துரோகங்களைச் செய்துள்ளான்’’

‘‘மணிவண்ணன் எனக்குச் சொந்தக்காரன் அல்லன். அவர் வேற்றூரவர். எமது கிராம மக்களின் விவசாய விளை பொருட்களைக் கொள்வனவு

செய்பவர். வியாபார விசயத்தில் நாணயமாக மக்களுடன் நடந்து கொள்கிறார். மக்களுக்கு உதவி செய்கிறார். கோயிலுக்கும் சனசமூக நிலையத்திற்கும் பெரும் உதவிகள் செய்கிறார். அதனால் நாம் அவரை மதிக்கிறோம். அவர் ஊர்மக்கள் எவருடனாவது முறை தவறி நடக்கவில்லை. எவரையும் ஏமாற்றவில்லை. நிறை குறைத்து நிறுப்பதில்லை. இவ்வளவுதான் எமக்குத் தேவை. அவர் தனது ஊரில் அல்லது தனது குடும்பத்தவரோடு எப்படி நடந்து கொண்டாலும் எமக்கு அக்கறை இல்லை. ஏனென்றால் எமக்கு அவரைத் திருத்தும் உரிமை இல்லை. அவர் ஒரு வியாபாரி. நாம் அவரது வாடிக்கையாளர்கள்". என்றார் வேலாயுதபிள்ளை.

"சிவசுந்தரமூர்த்தி உங்களின் நெருங்கிய உறவினன். எனினும் அவர் நல்ல மனிதரல்லன். மோசடிக்காரன் ; ஏமாற்றுக்காரன் ; இலஞ்சம் வாங்குபவன் ; ஊரிலுள்ள யாராவது ஒருவன் அவரை நல்லவன் என்று சொல்லட்டும் பார்ப்போம" என்றார் சண்முகலிங்கம்.

அதற்கு வேலாயுதபிள்ளையால் உடனே பதில் கூற முடியவில்லை. சிந்தித்துப் பார்த்தார். வார்த்தைகள் வர மறுத்தன. வேலாயுதபிள்ளை பேசாமல் இருந்ததால் சண்முகலிங்கம் சொன்னான்; "உங்களுக்கு மணிவண்ணன் நல்லவன் போல நடிக்கிறான். ஆனால் அவன் உண்மையில் நல்லவன் அல்ல. தன்னுடைய தங்கையின் கணவன் என்றுகூடப் பாராமல் வியாபார விசயத்தில் தனக்குச் சாதகமாக நடந்து கொண்டதால் எனக்கு எவ்வளவோ

நட்டமேற்பட்டது. இப்ப தன்னுடைய நன்மைக்காகத் தம்பியாரை விலை கூறிவிக்கிறான். உதவாத ஒரு குடும்பத்தில் பெண் எடுத்தால் நாளைக்கு எங்களுடைய மானமும் போய்விடும். உறவுகளுக்கிடையில் வரும் சண்டை சச்சரவுகள் நெடு நாட்களுக்கு நீடிக்காது. மணிவண்ணன் தான் கூடாதவன். தம்பியார் நல்லவன். அவனையும் கெடுக்க நினைக்கிறான். நாளைக்கு அவனுடைய குடும்பம் பிரிந்தால் தங்கச்சியார் மனம் வருந்துவாள். அவள் வருந்தினால் எனக்கும் துன்பம்தானே''. என்று சண்முகலிங்கம் கூறிக் கொண்டிருக்கும் போது வேலாயுதபிள்ளை குறுக்கிட்டுச் சொன்னார்; ''அந்தக் கலியாணம் நடக்க மாட்டாது. குருக்கள் சாதகம் பொருத்தமில்லை என்று சொல்லிப் போட்டார். இனி அதைப் பற்றி நீங்கள் கதைக்கத் தேவையில்லை.''

''அப்படியே! கடவுள் காப்பாற்றி விட்டார். இல்லையென்றால் திமிர்ப்பிடித்த அவளைக் கட்டி மச்சான் பாழாய்ப் போயிருப்பான்.''

''தீய செயல்கள் செய்பவனைப் பழி பாவம் ஒருபோதும் விடாது. ஒருவனின் நிழலானது எக்காலத்திலும் அவனை விட்டு நீங்காது அவனோடு சேர்ந்திருப்பதைப் போல ஒருவன் செய்யும் தீமைகள் அவனோடு எப்போதும் சேர்ந்திருந்து துன்பத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கும் என்று நம்புபவன் நான். எமது கிராமத்தில் தீய செயல்களை அஞ்சாது செய்வோர் சதா துன்பப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அப்படி மணிவண்ணன் தீய

செயல்களைச் செய்தால் அதற்கான தண்டனையைக் கட்டாயம் அனுபவிப்பான்''. என்றார் வேலாயுதபிள்ளை.

சண்முகலிங்கம் எதுவும் பேசாது கேட்டுக்கொண்டிருந்தான். தான் செய்யும் செயல்களை வேலாயுதபிள்ளை குத்திக் காட்டுகிறாரோ என்று நினைத்தான்.

''எங்கள் கிராமத்தவரைப் பொறுத்த வரை மணிவண்ணன் மிகவும் நேர்மையாக நடந்து கொள்கிறான். அவனது நடத்தையைப் பார்த்தால் அவன் நீங்கள் சொல்வது போல் நடக்கமாட்டான். என்றே எண்ணத் தோன்றுகிறது. எமது கிராம விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு அவன் கூலி மட்டுமே வாங்குகிறான். இலாபம் பெறுவதானால் அவன் பல இலட்ச ரூபாவைப் பெறலாம். விவசாயிகள் ஏமாற்று வியாபாரிகளினால் நட்டமடையக் கூடாதென்பதற்காகவே வியாபாரத்தைச் செய்வதாக மணிவண்ணன் கூறியுள்ளான். கள்ள வேலைகள், கலப்படங்கள் எதையும் மணிவண்ணன் செய்ததாக நான் அறியவில்லை. அதனால் மணிவண்ணன் தவறு செய்ய மாட்டான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்குகிறது.'' என்றார் வேலாயுதபிள்ளை.

208 தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை

வீயாது அடிஉறைந் தற்று.

ஒருவனது நிழல் எப்பொழுதும் அவனது காலடியில் தங்கியிருப்பதைப் போல தீய செயல்களைச் செய்தவரை அவற்றின் பயன் அவருடைய நிழலைப் போலத் தங்கியிருந்து கெடுக்கும்.

# தன்னை விரும்புவோன்

மணிவண்ணனின் சகோதரன் இளங்கோவன் வெளிநாட் டிலிருந்து வந்திருந்தான். அவன் வெளிநாட்டிலிருந்து வந்ததை அறிந்த விக்கினேஸ்வரமூர்த்தியும் வேலாயுதபிள்ளையும் தணிகாசலமும் அவனைச் சந்திப்பதற்காக மணிவண்ணனின் வீட்டுக்குச் சென்றனர். அங்கே சிவசுந்தரமூர்த்தி இருந்தார். தான் மணிவண்ணனுக்குப் பல தீமைகளைச் செய்த போதும் அவன் அவற்றையெல்லாம் மறந்து மன்னித்து தனது மகன் செய்த ஓரே ஒரு உதவிக்காக தனது மகளுக்கு சகோதரனைத் திருமணம் பேசி வந்ததை அவரால் மறக்க முடியவில்லை. தானும் திருந்தி நல்லவனாக வாழ்ந்தால் தனக்கு இருக்கும் துன்பங்கள் எல்லாம் நீங்கி விடுமென நினைத்தார்.

மூவரையும் கண்ட மணிவண்ணன் பெரு மகிழ்வோடு அவர்களை வரவேற்றான். வேலாயுதபிள்ளையும் தணிகாசலமும் தேவை ஏற்படும் வேளைகளில் அவனது வீட்டுக்கு வந்து செல்வார்கள்.

ஆனால் விக்கினேஸ்வரமூர்த்தி இதுவரை அவனது வீட்டுக்கு வரவில்லை. பெரும்மனிதரான அவர் தனது வீட்டுக்கு வந்ததை பெருமையாகக் கருதினான் மணிவண்ணன்.

தர்சினிக்கு தனது கண்களை நம்பமுடியவில்லை; "எமது அதிபர் எனது வீட்டுக்கு வந்துள்ளாரா?" என எண்ணினாள்.

"அதிபர் வீட்டுக்கு வந்தால் உள்ளே வரச் சொல்லி அழைப்பதில்லையா?" என்று கேட்டார் விக்கினேஸ்வரமூர்த்தி. திகைத்துப் போய் நின்ற தர்சினி தடுமாறியபடி; "உள்ளுக்கு வாருங்கோ...... வாருங்கோ. கதிரையில் இருங்கோ." என்றாள். அவளுக்கு வியர்த்தது.

இளங்கோவன் அவர்களை மகிழ்வுடன் வரவேற்றான். மணிவண்ணன் அவர்கள் மூவரையும் அறிமுகம் செய்தான் ; "உங்கள் எல்லோரைப் பற்றியும் அண்ணா அடிக்கடி தொலைபேசியில் சொல்வார். அண்ணா ஒருவரை மதித்தால் அவர் மிகுந்த குணவானாகத்தான் இருப்பார்" என்று சிரித்தான் இளங்கோவன்.

எல்லோரும் பாடசாலையைப் பற்றியும் கோயிலைப் பற்றியும் ஊர்ப் புதினங்களைப் பற்றியும் கதைத்தனர்.

"நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதி மிகவும் சக்தியுள்ளவர் என்று அடிக்கடி அண்ணா சொல்வார். அத்துடன் சுவாமிகளையும் பார்த்து ஆசி பெறல்

வேண்டும். அதைவிடப் பள்ளிக் கூடத்தை ஒருமுறை வந்து பார்க்க வேண்டும். தர்சினி தொலைபேசியில் வீட்டுப் புதினங்களைப் பற்றி என்னுடன் கதைப்பது குறைவு. அதிபரைப்பற்றியும் ரவிந்திரன் ஆசிரியரைப் பற்றியும் தான் வாய் ஓயாமல் கதைப்பாள்''. என்றான் இளங்கோவன்.

''உமக்கு அண்ணா திருமணம் பேசுகிறார். ஆனால் உங்கள் மைத்துனன் அதைக் குழப்புகிறார். இப்ப திருமணம் செய்வதற்காகவா வந்தீர்கள்? நான் இதைப் பற்றிக் கதைக்க மாட்டேன். சிவசுந்தரமூர்த்தி என்னுடைய நெருங்கிய உறவினர். நீங்கள் சம்மந்தம் பேசியதாலை நானும் உறவாகிவிட்டன் அதனால் தான் கேட்டனான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

அதற்கு மணிவண்ணன் அவசரமாகப் பதில் சொன்னான்; ''நான் உங்களோடு பழகத் தொடங்கிய சில நாட்களுக்குள்ளேயே என்னுடைய மூத்த சகோதரர்களாய் உங்களையும் தணிகாசலம் அண்ணையையும் நினைச்சிட்டன்.'' அவனது குரல் உணர்ச்சி வசப்பட்டது.

''பிறப்பால் உறவு வருவது தவிர்க்க முடியாதது. ஆனால் ஒழுக்கத்தால் உறவு வருவது பெருமைக்குரியது; பிரிவு ஏற்படாதது; புரிந்து கொள்ளும் தன்மை உடையது. அண்ணா எனது சகோதரிக்குச் சீதனமாக எல்லாவற்றையும் அள்ளிக் கொடுத்தார். இருந்தும் என்ன பயன்? அண்ணாவுக்குத் துன்பம் வந்தபோது துடித்தார்களா..? இல்லையே........! நான் வந்து மூன்று தினங்கள் கழிந்து விட்டன. ஆனால் உறவினர்கள் எவரும் வந்து என்னைப்

பார்க்கவில்லை; சுகம் விசாரிக்கவில்லை; எனது நண்பர்கள் பலர் நான் வருமுன்பே வீட்டில் வந்து காத்திருந்தனர் ; அண்ணாவின் நண்பர்கள் பலர் வந்தனர்.'' என்ற இளங்கோவன் சிறிது நேரம் தாமதித்து விட்டுச் சொன்னான்; ''அண்ணாதான் என்னுடைய தெய்வம் ; அவர் எதைச் சொன்னாலும் நான் அதைச் செய்வேன் ; அண்ணா எனக்குக் கஜேந்தினியைத் திருமணம் பேசும்போது அவளைப் பற்றியும் அவளது குடும்பத்தைப் பற்றியும் நிறையச் சொன்னார் ; ஒரு வார்த்தை கூட நல்லதாகச் சொல்லவில்லை; ஆனால் சரவணன் செய்த உதவியைப் பற்றிச் சொன்னார் ; நான் திகைச்சுப் போனேன். சரவணன் அந்த உதவியைச் செய்யாதிருந்தால் எமது குடும்பமே அழிந்திருக்கும். ஒழுக்கம்தான் மனிதனுக்கு உயிர் என்று நினைப்பவன் நான். ஏழைகளாக இருந்தாலும் ஒழுக்கமுள்ளவர்களை நான் வணங்கும் தெய்வமாத்தான் கருதுவேன்'' என்று இளங்கோவன் பேசிக் கொண்டிருந்தான். சிவசுந்தரமூர்த்திக்கு அவமானமாக இருந்தது; ''நான் எவ்வளவு கேவலமானவன் ; நான் உயர்கல்வி கற்றும் இதை ஏன் புரிந்து கொள்ளவில்லை; ஒரு நல்ல செயல் செய்ததற்காக இவ்வளவு பயன் என்றால் வாழ்நாள் பூராகவும் நல்ல செயல்களைச் செய்தால் எவ்வளவு பயன் கிடைக்கும்'' என்று நினைத்தார். ''ஒருவன் தன்னைத்தான் விரும்பி வாழ வேண்டும் என்று நினைத்தால், அவன் பிறருக்குத் தீமைகள் செய்யக் கூடாது. பிறருக்கு நாம் தீமை செய்தால் அவர்கள் எமக்குத் தீமை செய்யாவிட்டாலும்

அறக்கடவுள் தீமை செய்வார். அடுத்தவருக்கு நாம் தீமை செய்வதால் எமது நிம்மதி குலையும் ; இன்பம் குறையும் ; வாழ்வில் பற்று இல்லாமல் போய்விடும். கொடிய விலங்குகளை அழிக்கும் மனிதன் நல்ல மிருகங்களின் மீது அன்பு செலுத்துவதைப் போல பிறருக்குத் தீங்கு செய்யாதோரை எல்லோரும் விரும்புவார்கள். எனது சகோதரன் பிறருக்குத் தீங்கு செய்யாதவன்.'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் இளங்கோவன்.

வேலாயுதபிள்ளை எதுவும் பேசவில்லை. அவர்களுக்குள் இருக்கும் சகோதர பாசத்தை எண்ணி வியர்ந்தார்.

``ஒருவன் தன்மீது அன்புடையவனாய் இருக்க வேண்டுமானால் அவன் தீய செயல்களைச் செய்யக் கூடாது என்பது எவ்வளவு உண்மை. நான் என்மீது அன்பில்லாததினால் தான் எனக்கு நோய் வந்தது.'' என்று நினைத்தார் சிவசுந்தரமூர்த்தி.

209 தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்

துன்னற்க தீவினைப் பால்

தனது நல்வாழ்வை விரும்பும் ஒருவன் பிறருக்குச் சிறிய தீய செயல்களையும் செய்யாமல் இருத்தல் வேண்டும்.

# கேடற்றவன்

சண்முகலிங்கமும் ரோகினியும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்திருந்தனர். காலைப் பூசை முடிந்து வெகு நேரமாகியும் இளங்கோவன் கோயிலுக்கு வரவில்லை. இளங்கோவன் அன்று நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வருவான் என்று அறிந்த ரோகினியும் சண்முகலிங்கமும்அவனைச் சந்திப்பதற்காக ஆலயத்திற்கு வந்திருந்தனர். காலைப் பூசை முடிந்த பிறகும் இளங்கோவன் வருவான் என நினைத்துச் சண்முகலிங்கமும் ரோகினியும் கோயிலில் தங்கியிருந்தனர்.

மணிவண்ணன் ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்குப் பெரும் உதவி செய்பவன். அத்துடன் குருக்களின் மீது பெருமதிப்பு வைத்திருப்பவன். அதனால் இராஜசங்கரக்குருக்கள் அவனின் மீது அளவில்லாத அன்பு வைத்திருந்தார். மணிவண்ணன் ஸ்ரீவித்தியா மகா கணபதி மீதும் குருக்கள் மீதும் மட்டும் அன்பு வைத்துள்ளவன் அல்லன். அக்கிராம மக்கள் அனைவரிலும் அன்பு வைத்துள்ளவன் என்பது குருக்களுக்குத் தெரியும். வேற்றூரவரான மணிவண்ணன் வியாபாரத்தின் நிமிர்த்தம் குருக்களோடு ஆரம்பத்தில் தொடர்பு வைத்தான். ஆனால் காலப் போக்கில் அக்கிராமத்தவனாகி விட்டான். அத்துடன் அக்கிராம மக்களின் நலனில் மிகுந்த அக்கறை

கொண்டு பல நல்ல செயல்களைச் செய்து வந்தமையால் மணிவண்ணனை இராஜசங்கரக்குருக்கள் தான் பூசை செய்யும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி என்றே நினைத்தார்.

இது நாள்வரையும் கோயிலுக்கு வராத சண்முகலிங்கமும் ரோகினியும் அன்று கோயிலுக்கு வந்தது ஏதோ ஒரு தீய எண்ணத்துடன் தான் என்று குருக்கள் நினைத்தார். பூசை முடிந்த பின்பும் சண்முகலிங்கமும் அவனது மனைவியும் கோயிலில் நின்றமையால் குருக்கள் அவர்களின் அருகே வந்தார; "மணிவண்ணன் உத்தமன் ; உயர்ந்தவன் ; தீய செயல்களைக் கண்டு அஞ்சுபவன் ; பிறருக்கு கேடு வரவேண்டுமென்று கனவிலும் நினையாதவன் ; அதனால்தான் அவரின் மகளைக் கடத்த எண்ணியவர்களையும் மன்னித்து விடுதலை செய்யும்படி நீதிமன்றத்திற்கு மனுச் செய்தான். தனது மகளின் வாழ்வை அழிக்க எண்ணியவர்களை மன்னிக்கும் மனப்பாங்கு உலகில் உள்ளவர்களில் இலட்சத்தில் ஒருவருக்குக் கூட வரமாட்டாது. தனக்குத் தீமை செய்தவர்களை மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்யும் மணிவண்ணன் தனது உடன் பிறந்த சகோதரிக்குத் தீமை செய்வானென நான் நம்பவில்லை. நீங்கள் அறியாமையால் தவறான நெறியில் நடக்கிறீர்கள். தயவு செய்து மணிவண்ணனைப் புரிந்து நடவுங்கள். அதனால் உங்களுக்கு பெரும் நன்மை ஏற்படும்" என்றார் குருக்கள்.

சண்முகலிங்கம் வியாபாரப் பகை காரணமாகவும், கருணாகரனோடு கொண்ட தீய நட்புக் காரணமாகவும் தனது சகோதரனுடன் பகை கொண்டுள்ளான் என்பது ரோகினிக்குத் தெரியும் இருந்த போதும் துட்டனான தனது கணவனுக்குப் புத்திமதிகள் சொன்னால் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்பதற்காக அவள் அவனுக்குத் தனது சகோதரனைப் பற்றி ஏதுவும் சொல்வதில்லை. அவள் தனது சகோதரன் மீது அளவில்லாத அன்பும் மதிப்பும் வைத்திருந்தாள். ஆதனால் குருக்கள் அவனைப் பற்றிச் சொல்லும் போது அவளுக்கு அழுகை வந்து விட்டது. அதை அடக்க முடியாது விம்மினாள்.

அப்பொழுது மணிவண்ணனும் இளங்கோவனும் கோயிலுக்கு வந்தனர். அவர்களைக் கண்ட குருக்கள் மகிழ்வுடன் அவர்களை நோக்கிச் சென்றார். ரோகினி உணர்ச்சி மேலீட்டால் விம்மி விம்மி அழுதாள்.

இளங்கோவன் அவளின் அருகே வந்தான்; “ஒரு பெண் தன் கணவனின் சொற்படிதான் நடத்தல் வேண்டும். உனது நிலைமை எனக்கும் அண்ணாவுக்கும் தெரியும். மனவருத்தப்படாதே. ஒரு பெண்ணுக்குக் கணவன் அமைவது பூர்வ புண்ணியப் பயன். அண்ணா ஒருபோதும் தீய செயல்களைச் செய்ய மாட்டார். ஏனென்றால் ஒருவன் தவறான நெறியில் நின்று தீய செயல்களைச் செய்யாது இருப்பானானால் அவனுக்குக் கேடு வராது என்று பெரியவர்கள் சொல்வார்கள் விதைத்த விதைதான் முளைக்கும் ; மேலே எறிந்த பொருள் பூமியை வந்தடையும். அதேபோல் நாம் செய்யும் தீய

செயல்களும் எம்மை வந்தடையும். ஒருவன் இன்பமாக வாழ வேண்டுமென்று நினைத்தால் அவன் பிறருக்குக் கேடு செய்யக் கூடாது. தன்னைப் போல் பிறரையும் நேசித்தல் வேண்டும். அண்ணா உத்தமன் ; ஒழுக்கமானவன். பிறருக்குக் கேடு செய்யாதவன். இதை நான் சொல்லவில்லை. இந்தஊரே சொல்லுகிறது. அண்ணாவைப் பற்றி சண்முகலிங்கம் எவ்வளவு தவறாக எனக்கு எழுதினான். அத்துடன் தொலைபேசியில் சொன்னான். அதை நான் நம்பியிருந்தால் என்னை நானே அழித்துக் கொண்டவனாவேன். இனியாவது நீங்கள் திருந்தி தவறான நெறியில் சென்று தீய செயல்களைச் செய்யாதிருங்கள். அப்படி இருந்தால் உங்களுக்குக் கேடு வராது''. என்றான் இளங்கோவன்.

சண்முகலிங்கம் எதுவும் பேசத் தோன்றாது பிரமை பிடித்தவனைப் போல நின்றான். ரோகினி விக்கி விக்கி அழுதாள். அவள் அழுவதைப் பார்த்து வேதனை தாங்க முடியாமல் மணிவண்ணனும் அழுதான்.

210 அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்

தீவினை செய்யான் எனின்

ஒருவன் தவறான வழியில் சென்று தீய செயல்களைச் செய்யாதிருந்தால், அவன் கேடில்லாதவன் என அறிந்த கொள்ளலாம்.